## வேளாண்மை கூட்டுறவு வங்கியில் தரமற்ற உரம் விற்பனை

தேனி அருகே கோடாங்கிபட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் காலாவதியான, கலப்படம் செய்யப்பட்ட உரம் விற்பனை செய்யப்படுவதாக திங்கள்கிழமை கோடங்கிபட்டியைச் சேர்ந்த விவசாயி, உர மூடைகளுடன் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்துக்கு வந்து ஆட்சியரிடம் புகார் தெரிவித்தார்.

கோடங்கிபட்டியைச் சேர்ந்த மூக்கத்தேவர் மகன் பால்பாண்டி. இவர், கோடங்கிபட்டியில் உள்ள தொடங்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் சில நாள்களுக்கு முன் யூரியா, பாக்கடம்பாஸ் மற்றும் கலப்பு உர மூட்டைகளை விலைக்கு வாங்கினாராம். உர மூடைகளை தோட்டத்துக்கு கொண்டு சென்று பிரித்து பார்த்தபோது, பாக்டம்பாஸ் உரத்தில் செங்கல் மற்றும் குப்பைகள் இருந்ததாகக் கூறப்படுகிறது. யூரியா மற்றும் கலப்பு உரம் காலாவதியாகி பயன்படுத்த முடியாத நிலையில் இருந்தது தெரியவந்ததாம்.

இது குறித்து தேனியில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர் கூட்டத்தில் புகார் தெரிவிக்க, உர மூட்டைகளுடன் பால்பாண்டி வந்திருந்தார். ஆட்சியர் அலுவலகம் முன் உர மூட்டைகளை பிரித்துக் கொட்டி, கலப்படம் செய்யப்பட்டிருந்த செங்கல் மற்றும் குப்பைகளை சேகரித்து கூட்ட அரங்குக்கு கொண்டு சென்றார். கலப்படம் செய்யப்பட்ட உரத்தை ஆட்சியர் கே.எஸ். பழனிசாமியிடம் காண்பித்து இது குறித்து புகார் மனு அளித்தார்.

இப்புகாரின் மீது நடவடிக்கை எடுக்க வேளாண்மை மற்றும் கூட்டுறவுத் துறை அதிகாரிகளுக்கு ஆட்சியர் உத்தரவிட்டார். ஆட்சியர் அலுவலகம் முன் கொட்டி வைக்கப்பட்டிருந்த உர மூட்டைகளை வேளாண்மை தரக்கட்டுப்பாட்டு உதவி இயக்குநர் ஜெயபாண்டியன் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

டான்பெட் நிறுவனம் மூலம் சில நாள்களுக்கு முன் 177 டன் காலவதியான உரம் விநியோகம் செய்யப்பட்டதாவும், இந்த உர மூட்டைகளை விற்பனை செய்ய கூட்டுறவுச் சங்கங்களுக்கு விவசாயத் துறை சார்பில் ஏற்கனவே தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும், தடையை மீறி காலவதியான உரம் விற்பனை செய்யப்பட்டுள்ளதாகவும் வேளாண்மைத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

## நுகர்வு குறைவு:கறிக்கோழி விலை சரிவு

தமிழகம் மற்றும் கேரள மாநிலங்களில் கறிக்கோழி விற்பனை மார்க்கெட் நிலவரத்துக்கேற்ப திருப்பூர் மாவட்டம், பல்லடத்தை தலைமையிடமாகக் கொண்டு

செயல்படும் பி.சி.சி. (பிராய்லர் கோர்டினேஷன் கமிட்டி) தினந்தோறும் பண்ணைக் கொள்முதல் விலையை நிர்ணயம் செய்கிறது.

ஞாயிற்றுக்கிழமை கறிக்கோழி பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ.55-ஆக இருந்தது. பெரும்பாலானோர் புரட்டாசி விரதம் மேற்கொண்டு வரும் நிலையில் கோழி இறைச்சி உள்ளிட்ட அசைவ உணவுகளைத் தவிர்த்து வருகின்றனர். இதன் காரணமாக கோழி இறைச்சி நுகர்வு குறைந்ததால் திங்கள்கிழமை கறிக்கோழி பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ.45-ஆக குறைத்து நிர்ணயம் செய்யப்பட்டது.

முட்டை விலை: நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு திங்கள்கிழமை அறிவித்த முட்டை பண்ணைக் கொள்முதல் விலை நாமக்கல்லில் ரூ.3.30, சென்னையில் ரூ.3.18.

## பவானிசாகர் அணை நீர்மட்டம் 77.11 அடி

பவானிசாகர் அணை நீர்மட்டம் திங்கள்கிழமை நிலவரப்படி 77.11 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 1,297 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 1,300 கன அடி நீரும், வாய்க்காலில் 2,560 கன அடி நீரும் திறந்துவிடப்பட்டது. அணையில் நீர் இருப்பு 14.20 டி.எம்.சி.

## தேங்காய் பருப்பு ரூ.10 லட்சத்திற்கு விற்பனை

திருச்செங்கோடு வட்டம், மல்லசமுத்திரத்தில் அமைந்துள்ள திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கக் கிளையில் கடந்த சனிக்கிழமை தேங்காய் பருப்பு ரூ. 10 லட்சத்திற்கு விற்பனையானது.

வீரபாண்டி, ஆட்டையாம்பட்டி, அயோத்தியாபட்டணம், மல்லூர், சிறுமொளசி, திருச்செங்கோடு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் தேங்காய் பருப்புகளைக் கொண்டு வந்தனர். இவற்றை வாங்க காங்கேயம், வெள்ளக்கோயில், பெருந்துறை, பொள்ளாச்சி, ஊத்துக்குளி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த வியாபாரிகள் வந்திருந்தனர்.

அதிகபட்சமாக ஒரு கிலோவுக்கு ரூ.64ம், குறைந்த பட்சமாக ரூ.58ம் விற்பனையானது.

கடந்த வாரத்தைவிட கிலோவுக்கு ரூ. 8 அதிகம் கிடைத்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

## சாகுபடிக்கு பாசன வசதி கோரி ஆட்சியரிடம் மனு

கோட்டரக்குளத்தில் 60 ஆண்டுகளுக்கு முன்பு 37 பேருக்கு வழங்கப்பட்ட நிலத்தில் சாகுபடி மேற்கொள்ள பாசன வசதி செய்துத்தர வேண்டும் என அந்த விவசாயிகள் மாவட்ட ஆட்சியரிடம் கோரிக்கை மனு அளித்துள்ளனர்.

இதுதொடர்பாக தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் திருவெறும்பூர் ஒன்றியச் செயலர் எஸ். ராதாகிருஷ்ணன் தலைமையில் விவசாயிகள் அளித்த மனு:

திருச்சி திருவெறும்பூர் பத்தாளபேட்டை ஊராட்சிக்குள்பட்ட கோட்டரப்பட்டியில் சுமார் 119 ஏக்கரில் உள்ள கோட்டரக்குளத்தின் மேட்டுப் பகுதியில் கடந்த 60 ஆண்டுகளுக்கு முன் முன்னாள் ராணுவத்தினர் மற்றும் நிலமற்ற ஏழை விவசாயிகள் 37 பேருக்கு நிலம் வழங்கப்பட்டது.

இதுவரை அரசுக்கு உரிய வரிகளையும் செலுத்தி வருகிறோம். இந்த நிலத்துக்கான பாசனம், உய்யகொண்டான் வாய்க்காலில் இருந்து கோட்டரக்குளத்துக்குச் செல்லும் கிளை வாய்க்காலின் கசிவு நீரில்தான் கிடைத்தது. இந்த ஆண்டு சாகுபடி தொடங்கும்போது, உள்ளூரிலுள்ள விவசாயிகள் தானாக தண்ணீர் வரும்பகுதியைத் தடுக்கிறார்கள். எனவே, பிரிவு வாய்க்காலில் இருந்து தனியாக ஒரு பாசன வசதி செய்துத்தர வேண்டும். குறிப்பாக மஞ்சள்திடல் பாலத்திலிருந்து கிழக்கே தொண்டைமான் பட்டி வரை ஆயிரக்கணக்கான நன்செய் நிலங்கள் பாசனத்தில் கூடுதல் தண்ணீரில் இருந்து பாசன வசதி செய்துத் தரலாம் என அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## நிவாரணம் கோரி கரும்பு விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

வறட்சியால் பாதிக்கப்பட்ட கரும்பு விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ. 40 ஆயிரம் வழங்கக் கோரி அரியலூரில் திங்கள்கிழமை விவசாயிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அரியலூர் ஆட்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்க மாவட்டத் தலைவர் ஈ. ஜெயபால் தலைமை வகித்தார். அரியலூர் மாவட்டம், சாத்தமங்கலம் கிராமத்தில் உள்ள தனியார் சர்க்கரை ஆலைக்குள்பட்ட கிராமங்களில் வறட்சியால் காய்ந்துபோன கரும்பு பயிருக்கு ஏக்கருக்கு ரூ.40 ஆயிரம் வழங்க வேண்டும், அரசு அதிகாரிகள், விவசாய சங்கப் பிரதிநிதிகள், தனியார் ஆலை நிர்வாகத்தினர் கொண்ட முத்தரப்புக் கூட்டத்தை கூட்ட வேண்டும், புதிய பயிர்க் கடன் வழங்க வேண்டும் உள்ளிட்டக் கோரிக்கைகள் ஆர்ப்பாட்டத்தில் வலியுறுத்தப்பட்டன.

ஆர்ப்பாட்டத்தில் கரும்பு விவசாயிகள் சங்க மாநிலப் பொதுச் செயலாளர் டி. ரவீந்திரன், மாநிலச் செயலாளர் எஸ். காமராஜ், விவசாயிகள் சங்க மாநிலச் செயலாளர் என். செல்லத்துரை ஆகியோர் கோரிக்கைளை விளக்கிப் பேசினர். இதில் கரும்பு விவசாயிகள் சங்க மாவட்டச் செயலாளர் எம். மணியன், மாநிலக்குழு உறுப்பினர் ஏ. அன்பழகன்,

விவசாயிகள் சங்க வட்டச் செயலாளர் வரபிரசாதம், பொருளாளர் வளர்மதி, திருமானூர் ராமலிங்கம்பிள்ளை, விழுப்பணங்குறிச்சி கருப்பையன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## கரும்பு நிலுவை கோரி ஆர்ப்பாட்டம்

கரும்புக்கான நிலுவைத் தொகை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி திமுக விவசாயத் தொழிலாளர்கள் மயிலாடுதுறையில் திங்கள்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நாகை மாவட்ட விவசாயத் தொழிலாளர் அணி சார்பில், வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகம் முன் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு கட்சியின் மாவட்டச் செயலரும், நாகை எம்.பி.யுமான ஏ.கே. எஸ். விஜயன் தலைமை வகித்தார்.

விவசாயத் தொழிலாளர் அணி மாவட்ட அமைப்பாளர்கள் ஜெக. வீரபாண்டியன், நிவேதா எம். முருகன், திமுக ஒன்றியச் செயலர் எம். மூர்த்தி, நகரச் செயலர் என். செல்வராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் மயிலாடுதுறை வட்டம், தலைஞாயிறு என்பிகேஆர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை நிர்வாகம் கரும்பு உற்பத்தியாளர்களான விவசாயிகளுக்கு கொடுக்க வேண்டிய நிலுவைத் தொகையை உடனே வழங்க வேண்டும். கூட்டுறவுக் கடன் சங்கங்களில் கட்சிப் பாகுபாடின்றி அனைத்து விவசாயத் தொழிலாளர்களுக்கும் விவசாயக் கடன் வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

மாணவர் அணி மாநிலச் செயலர் இள. புகழேந்தி,விவசாயப் பிரிவு நாகை மாவட்ட துணை அமைப்பாளர்கள் மகா. அலெக்ஸாண்டர், எம்ஏகே. சுபாஷ் சந்திரபோஸ் ஆகியோர் பேசினர்.

ஆர்ப்பாட்ட நிறைவில் தமிழக அரசைக் கண்டித்து முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

முன்னாள் எம்எல்ஏ கி. சத்தியசீலன், எம். எம். சித்திக், மாவட்டத் துணைச் செயலர் வை. ஞானசேகரன், செம்பனார்கோயில் ஒன்றியச் செயலர் எம். ஞானவேலன் மற்றும் 300-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். விவசாயப் பிரிவு மாவட்ட நிர்வாகி காழி. கலைவாணன் நன்றி கூறினார்.

## "விலையில்லா மாடுகள் திட்டத்தால் மாவட்டத்தில் வெண்மைப் புரட்சி

தமிழக அரசின் விலையில்லா கறவை மாடுகள் வழங்கும் திட்டத்தால், கடலூர் மாவட்டத்தில் பால் கொள்முதல் அதிகரித்து வெண்மை புரட்சி ஏற்பட்டுள்ளதாக

ஆட்சியர் ரா.கிர்லோஷ்குமார் தெரிவித்துள்ளார்.

இது குறித்துஅவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

கடலூர் மாவட்டத்தில் 2011-2012 மற்றும் 2012-2013 நிதியாண்டில் தலா 900 பயனாளிகளுக்கு மொத்தம் ரூ.6.34 கோடி செலவில் விலையில்லா கறவை மாடுகள் வழங்கப்பட்டுள்ளன.

நிகழாண்டில் இதுவரை, 400 பயனாளிகளுக்கு ரூ.1.42 கோடி செலவில் விலையில்லா கறவை மாடுகள் வழங்கப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்தின் கீழ், கடந்த 3 ஆண்டுகளில் 2,200 பயனாளிகளுக்கு ரூ.7.76 கோடி அரசு செலவு செய்துள்ளது. இதன்மூலம், 44 கிராம மக்கள் பயன் பெற்றுள்ளனர்.

இதுபோல, 2011-2012 நிதியாண்டில் ரூ.5 கோடி செலவில் 3,938 பயனாளிகளுக்கு 15,752 ஆடுகள், 2012-2013-ம் ஆண்டில் ரூ.8.96 கோடி செலவில், 7,033 பயனாளிகளுக்கு 28,132 ஆடுகள், நிகழாண்டில் ரூ.3.80 கோடி செலவில் இதுவரை 2,924 பயனாளிகளுக்கு 11, 696 ஆடுகள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த 3 ஆண்டுகளில் ரூ.17.78 கோடி செலவில் 307 கிராமங்களைச் சேர்ந்த 13,895 பயனாளிகளுக்கு 55,580 ஆடுகள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், நிகழாண்டில் 9 கிராமங்களைச் சேர்ந்த 450 பயனாளிகளுக்கு ரூ.1.60 கோடி செலவில், 450 விலையில்லா கறவை மாடுகள், ரூ.3.97 கோடி செலவில், 74 கிராமங்களை சேர்ந்த 3,058 பயனாளிகளுக்கு 12,232 ஆடுகள் வழங்கப்பட உள்ளன.

இந்தத் திட்டத்தால், கடலூர் மாவட்டத்தில் உள்ள 256 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களில் கொள்முதல் செய்யப்படும் பால் அளவு அதிகரித்துள்ளது.

கடந்த ஆண்டு 45,723 லிட்டராக இருந்த பால் கொள்முதல் நிகழாண்டில், 48,000 லிட்டராக அதிகரித்துள்ளது. விலையில்லா கறவை மாடுகள் மூலம் நாள் ஒன்றுக்கு 2,978 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. இந்தத் திட்டத்தின் மூலம் கணவனை இழந்த மகளிர்கள், ஆதரவற்ற ஏழை பெண்கள், வறுமைக் கோட்டுக்கு கீழே வாழும் பெண்கள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின பெண்கள் மற்றும் இதர சமூகத்தினரும் பயன் பெற்று வருகின்றனர்.

மேலும், இந்தத் திட்டம் கடலூர் மாவட்டத்தில் வெண்மைப் புரட்சியை ஏற்படுத்தியுள்ளது என்றார் ஆட்சியர்.

ஏப்ரல்–ஜூலை மாத காலத்தில் பாகிஸ்தானுக்கான தேயிலை ஏற்றுமதி 31 சதவீதம் சரிவு



நடப்பு நிதி ஆண்டில் ஏப்ரல்–ஜூலை வரையிலான காலத்தில், பாகிஸ்தானுக்கான தேயிலை ஏற்றுமதி 31 சதவீதம் சரிந்து 2.20 கோடி கிலோவாக குறைந்துள்ளது. கென்யா நாடு தேயிலையை குறைந்த விலையில் அந்நாட்டிற்கு ஏற்றுமதி செய்வதே இதற்கு காரணமாகும் என இந்திய தேயிலை வர்த்தக கூட்டமைப்பின் துணை தலைவர் ரமேஷ் சந்த் அகர்வால் தெரிவித்தார்.

இந்திய தேயிலை ஏற்றுமதியில் ரஷ்யா மற்றும் சீனாவை அடுத்து மூன்றாவது பெரிய சந்தையாக பாகிஸ்தான் விளங்குகிறது. தற்போது அந்நாட்டிற்கு 1 கிலோ தேயிலை 1.80 டாலர் என்ற அளவில் ஏற்றுமதி செய்யப்படுகிறது. அதேசமயம், கென்யா தேயிலை விலை (கிலோ 1.20 டாலர்) குறைவாக உள்ளதால் பாகிஸ்தானுக்கு கென்யாவிலிருந்து தேயிலை ஏற்றுமதி அதிகரித்துள்ளது. எனினும், நடப்பு நிதி ஆண்டில் அந்நாட்டிற்கான இந்திய தேயிலை ஏற்றுமதி சென்ற நிதி ஆண்டை போல் 19 கோடி கிலோவாக இருக்கும் என மதிப்பிடப் பட்டுள்ளது.

ரஷ்யா, சீனா மற்றும் அண்டை நாடுகளில் பல்வேறு வகையான இந்திய தேயிலைக்கு தேவைப்பாடு காணப்படுகிறது. இதன் காரணமாக ஏற்றுமதி நன்றாக இருக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.

நடப்பு நிதி ஆண்டின் ஜூலை மாதத்தில் தேயிலை உற்பத்தி 16 சதவீதம் அதிகரித்து 15.51 கோடி கிலோவாக உயர்ந்துள்ளது. மேற்கு வங்காளம் மற்றும் அசாம் மாநிலங்களில் உற்பத்தி அதிகரித்ததே இதற்கு காரணமாகும் என தேயிலை வாரியம் தெரிவித்துள்ளது.

## முட்டை விலை 10 காசுகள் உயர்வு 330 காசுகளாக நிர்ணயம்



நாமக்கல் மண்டலத்தில் முட்டை கொள்முதல் விலை இன்று ஒரே நாளில் 10 காசுகள் உயர்ந்து 330 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டது.

**முட்டை விலை உயர்வு**

நாமக்கல் மண்டலத்தில் முட்டை கொள்முதல் விலை கடந்த சில நாட்களாக 320 காசுகளாக நீடித்து வந்தது. இந்த நிலையில் இன்று நாமக்கல்லில் நடந்த தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் முட்டையின் கொள்முதல் விலையை 10 காசுகள் உயர்த்த முடிவு செய்தனர். எனவே முட்டை கொள்முதல் விலை 330 காசுகளாக உயர்ந்து உள்ளது.

பிற மண்டலங்களில் முட்டை விலை (காசுகளில்) வருமாறு:– சென்னை–318, ஐதராபாத்–308, விஜயவாடா, தனுகு–317, பார்வாலா–312, மும்பை–340, மைசூர்–320, பெங்களூர்–320, கொல்கத்தா–352, டெல்லி–323.

கறிக்கோழி கிலோ ரூ.52–க்கு விற்பனை செய்யப்பட்டு வந்தது. இன்று பல்லடத்தில் நடந்த கறிக்கோழி ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் கிலோவுக்கு ரூ.3 உயர்த்த முடிவு செய்தனர். எனவே கறிக்கோழி விலை கிலோ ரூ.55 ஆக உயர்ந்து உள்ளது.

முட்டைக்கோழி கிலோ ரூ.58–க்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. அதன் விலையில் மாற்றம் செய்யப்படவில்லை.

**காரணம் என்ன?**

புரட்டாசி மாதம் பிறந்து 2 வாரங்கள் முடிந்து விட்டதால், தமிழகம் மற்றும் கேரளாவில் பொதுமக்களிடையே முட்டை நுகர்வு சற்று அதிகரித்து உள்ளது. அதேசமயம் வடமாநிலங்களில் முட்டை நுகர்வு சூடுபிடிக்க தொடங்கி உள்ளதால், பிறமண்டலங்களில் முட்டை விலை உயர்ந்து வருகிறது. அதற்கு தகுந்தாற்போல் நாமக்கல் மண்டலத்திலும் விலை உயர்த்தப்பட்டு இருப்பதாக பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.

## நெல்பயிரில் பாக்டீரியா இலைப்புள்ளி நோய் தாக்குதல் கட்டுப்படுத்தும் வழிமுறைகள் குறித்து அதிகாரி விளக்கம்



டி.என்.பாளையம் பகுதியில் நெல் பயிரில் பாக்டீரியா இலைப்புள்ளி நோய் தாக்குதல் காணப்படுகிறது. இதை கட்டுப்படுத்தும் வழிமுறைகள் குறித்து வேளாண்மை அதிகாரி விளக்கம் அளித்து உள்ளார்.

இலைப்புள்ளி நோய் தாக்குதல்

டி.என்.பாளையம் வேளாண்மை வட்டாரத்துக்கு உள்பட்ட அரக்கன்கோட்டை பாசன பகுதிகளில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கர் பரப்பளவில் நெல் சாகுபடி செய்யப்பட்டு உள்ளது. இதில் ஏ.எஸ்.டி.–16, ஏ.டி.டி.–43, ஏ.டி.டி.–39, கோ–38, கோ–39 ஆகிய ரக நெல்பயிர்கள் பயிரிடப்பட்டு உள்ளன.

கடந்த மாதம் நடவு செய்யப்பட்ட நெல் நாற்றுக்கள் நன்கு வளர்ச்சி அடைந்து காணப்படுகிறது. தற்போது, அரக்கன்கோட்டை பாசன பகுதிகளில் நெல் வயல்களில்

களை எடுக்கும் பணி தீவிரமாக நடந்து வருகிறது. இந்த நிலையில், இந்த பாசன பகுதிகளில் உள்ள நெல் பயிர்களில் பாக்டீரியா இலைப்புள்ளி நோய்த் தாக்குதல் ஏற்பட்டு உள்ளது.

கட்டுப்படுத்தும் வழிமுறைகள்

இந்த நோயை கட்டுப்படுத்தும் வழிமுறைகள் குறித்து டி.என்.பாளையம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் சிதம்பரம் கூறியதாவது:–

பாக்டீரியா இலைப்புள்ளி நோய்த் தாக்குதல் ஏற்பட்டு உள்ள நெல் பயிர்களில் இலைகளின் நுனி மற்றும் ஓரங்களில் ஆரஞ்சு நிற கீறல்கள் நீளவாக்கில் காணப்படும். நாளடைவில் இந்த கீறல்கள் ஒன்றோடொன்று இணைந்து வைக்கோல் போன்று காய்ந்து காணப்படும்.

வயல்களில் காணப்படும் அதிகமான களைகள், காற்றில் அதிகமான ஈரப்பதம் நிலவும் சூழ்நிலை, மழைத்துளி, வேகமாக வீசும் காற்று ஆகியவை இந்த நோய் வேகமாக பரவுவதற்கான சூழல்கள் ஆகும். நடவின்போது நாற்றின் நுனிகளைக் கிள்ளி நடுவதை தவிர்த்தல், அதிகமான தழைச்சத்து (யூரியா) உரம் இடுவதை தவிர்த்தல், களைகளை அகற்றி வயலை சுத்தமாக வைத்துக் கொள்வது, நோய் தாக்கிய வயலில் இருந்து மற்ற வயல்களுக்கு பாசன நீர் செல்லாமல் தவிர்த்தல் போன்ற நடவடிக்கைகளின் மூலம் இந்த நோயின் தாக்கத்தை குறைக்க முடியும்.

பசுஞ்சாண கரைசல்

நோயின் தாக்குதல் அதிகமாகும் போது காப்பர் ஹைட்ராக்சைடு மருந்தை ஏக்கருக்கு 250 கிராம் என்ற அளவில் இலைகளின் மேல் தெளித்தோ அல்லது காப்பர் ஆக்ஸிகுளோரைடு 500 கிராம் மற்றும் ஸ்டெப்ரோசைக்ளின் மருந்து 120 கிராம் ஆகியவற்றை கலந்து பயிரின் மேல் தெளித்தும் நோயை கட்டுப்படுத்தலாம்.

நாற்றங்கால் விடும்போது ஸ்டெப்ரோசைக்ளின் 3 கிராம் லிட்டர் என்ற அளவில் 8 மணி நேரம் விதைகளை ஊறவைத்து விதை நேர்த்தி செய்து விதைக்கலாம். 5 சதவீதம் வேப்பங்கொட்டை கரைசல் தெளித்தும், இந்த நோயினை கட்டுப்படுத்தலாம். நோயின் அறிகுறிகள் தென்பட்டவுடன் புதிய பசுஞ்சாணத்தை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 20 கிராம் என்ற அளவில் கரைத்து வடிகட்டி 15 நாட்கள் இடைவெளியில் 2 முறை தெளிக்க வேண்டும்.

இந்த தகவலை வேளாண்மை உதவி இயக்குனர் சிதம்பரம் கூறினார்.

## குன்னூர் ஏல மையத்தில் 71 சதவீத தேயிலை தூள் விற்பனை



குன்னூர் ஏல மையத்தில் 71 சதவீத தேயிலை தூள் விற்பனையானைது.

தேயிலை ஏலம்

குன்னூர் தேயிலை வர்த்தகர் அமைப்பின் சார்பில் வாரந் தோறும் வியாழன், வெள்ளி ஆகிய 2 நாட்கள் தேயிலை ஏலம் நடத்தப்படுகிறது. இந்த ஏலத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தகர்கள் கலந்து கொண்டு தேயிலை தூளை ஏலம் எடுக்கிறார்கள்.

விற்பனை எண் 39-க்கான ஏலம் கடந்த 26, 27-ந் தேதி நடை பெற்றது. ஏலத்திற்கு மொத்தம் 15 லட்சத்து 37ஆயிரம் கிலோ தேயிலை தூள் வந்தது. இதில், 10 லட் சத்து 79 ஆயிரம் கிலோ இலை ரகமாகவும், 4 லட்சத்து 57 ஆயிரம் கிலோ டஸ்ட் ரக மாகவும் இருந்தது.

71 சதவீத தேயிலை விற்பனை

இந்த ஏலத்தில் 71 சதவீத தேயிலை தூள் விற்பனை ஆனது. இதில் அனைத்து தேயிலை தூள் ரகங்களின் விலையில் மாற்றம் இல்லாமல் நிலையான விலையிலேயே விற்பனை ஆனது. சி.டி.சி. தேயிலை தூளின் உயர்ந்த பட்ச விலை யாக 180 ரூபாயாக இருந்தது. ஆர்தோடக்ஸ் தேயிலை தூள் 250 ரூபாய் என்று உயர்ந்த பட்ச விலையாக ஏலம் சென்றது.

சராசரி விலையாக இலை ரக தேயிலை தூளின் சாதா ரண வகை 62 ரூபாயில் இருந்து 68 ரூபாய் வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் 110 ரூபாயில் இருந்து 150 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றது.

டஸ்ட் ரக தேயிலை தூளின் சாதாரண வகை 70 ரூபாயில் இருந்து 76 ரூபாய் வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் 120 ரூபாயில் இருந்து 175 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றது. விற்பனை எண் 40-க்கான ஏலம் வருகிற 3, 4 ஆகிய நாட்களில் நடக்கிறது. ஏலத்திற்கு மொத்தம் 16 லட்சத்து 12 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வருகிறது.

## பாசனத்திற்கு தண்ணீர் திறந்துவிடக் கோரி காட்டுச்சேரியில் விவசாயிகள் சாலை மறியல் 2 மணி நேரம் போக்குவரத்து பாதிப்பு



காட்டுச்சேரியில் பாசனத்திற்கு தண்ணீர் திறந்துவிடக் கோரி விவசாயிகள் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் சுமார் 2 மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

<u>சாலை மறியல்</u>

பொறையாறு அருகே காட்டுச்சேரி கிராமத்தில் பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடகோரி விவசாயிகள் சாலை மறியல் போராட்டம் நடத்தினர். போராட்டத்திற்கு விவசாயிகள் சங்க தலைவர் சாமிநாதன் தலைமை தாங்கினார். செயலாளர் செந்தில், பாவலர் ராஜமாணிக்கம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

போராட்டத்தின்போது, காட்டுச்சேரி பகுதியில் சம்பா நாற்றாங்கால் மற்றும் நேரடி நெல் விதைப்பு செய்த பயிர்கள் தண்ணீர் இல்லாமல் கருகி வருகிறது. இதனால் கருப்பப்பிள்ளை வாய்க்காலில் இருந்து பாசனத்திற்கு முறையில்லாமல் 15 நாட்களுக்கு தண்ணீர் திறந்துவிட வேண்டும். மேலும், கருப்பப்பிள்ளை வாய்க்காலில் அடைத்து வைக்கப்பட்டள்ள கருங்கல் பாறைகளை உடனே அப்புறப்படுத்த பொதுப்பணித்துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். காட்டுச்சேரியில் பாசனத்திற்காக

பயன்படுத்தப்படும் 7 வடிகால்கள் மற்றும் பாசன வாய்க்கால்களை தூர்வார வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

<u>போக்குவரத்து பாதிப்பு</u>

தகவல் அறிந்த தரங்கம்பாடி தாசில்தார் அழகர்சாமி, பொதுப்பணித்துறை உதவிப்பொறியாளர் சுப்பிரமணியன் ஆகியோர் விரைந்துச் சென்று சாலை மறியலில் ஈடுபட்டவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினர். இதில் விவசாயிகளின் கோரிக்கைகளை நிறைவேற்றி தருவதாக அதிகாரிகள் உறுதி அளித்தனர். அதன் பேரில் சாலை மறியல் போராட்டம் கைவிடப்பட்டது. இதனால் மயிலாடுதுறை–நாகை சாலையில் சுமார் 2 மணிநேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

## சிதம்பரம் கான்சாகிப் வாய்க்கால் பாசனத்துக்கு தண்ணீர் திறக்கக்கோரி



சிதம்பரம் கான்சாகிப் வாய்க்கால் பாசனத்துக்கு தண்ணீர் திறக்கக்கோரி கடலூர் மாவட்ட கூட்டுறவு வங்கி முன்பு வருகிற 7–ந் தேதி முற்றுகை போராட்டம் நடத்தப்படும் என்று தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தினர் மாவட்ட வருவாய் அதிகாரி மனோகரனிடம் மனு அளித்தனர்.

<u>விவசாயிகள் மனு</u>

கடலூரில் நேற்று நடந்த மக்கள் குறைகேட்பு நாள் கூட்டத்தில் தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட தலைவர் மாதவன் தலைமையில் மாவட்ட செயலாளர் ரவிச்சந்திரன், பொருளாளர் தட்ணாமூர்த்தி மற்றும் விவசாயிகள் சங்க நிர்வாகிகள் மாவட்ட வருவாய் அதிகாரி மனோகரனிடம் மனு அளித்தனர்.

அந்த மனுவில் அவர்கள் கூறியிருப்பதாவது:–

நெற்பயிர்கள் கருகும் நிலை

சிதம்பரம், காட்டுமன்னார்கோவில் வட்டத்தில் போதிய தண்ணீர் இல்லாமல் விவசாயிகள் மிகவும் சிரமப்பட்டு வருகின்றனர். நேரடி நெல் விதைப்பு, நாற்றங்கால் விட்ட விவசாயிகளுக்கு தண்ணீர் இல்லாமல் பயிர்கள் கருகும் நிலை ஏற்பட்டுள்ளது. மேட்டூர் அணையில் இருந்து கல்லணைக்கு வரும் தண்ணீரில் 10 சதவீதம் நமக்கு தர வேண்டும்.

அதன்படி கல்லணையில் இருந்து 2 ஆயிரம் கன அடி தண்ணீர் தருவதாக அறிவிக்கப்பட்டு இருந்தது. ஆனால் தண்ணீர் குறைத்து வழங்கப்படுகிறது. கல்லணையில் இருந்து நமக்கு உரிய தண்ணீரை கேட்டு பெற வேண்டும். வீராணம் ஏரி தண்ணீரை சிதம்பரம், காட்டுமன்னார்கோவில் பாசனத்துக்கு முன்னுரிமை அளித்து வழங்கிட வேண்டும்.

முற்றுகை போராட்டம்

சிதம்பரம் கான்சாகிப் வாய்க்கால் பாசனத்துக்கும், புவனகிரி, பரங்கிப்பேட்டை பகுதி பாசனத்துக்கும் கான்சாகிப் வாய்க்காலில் சேத்தியாத்தோப்பு அணைக்கட்டிலும் தண்ணீர் திறந்து விட நடவடிக்கை எடுக்க வேண்டும். வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு பயிர் இன்சூரன்ஸ் தொகையை உடனே வழங்க வேண்டும். நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வறட்சி நிவாரணத்தை வழங்க வேண்டும்.

இந்த கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் வருகிற 7–ந் தேதி சிதம்பரம் தெற்கு வீதியில் உள்ள கடலூர் மாவட்ட கூட்டுறவு வங்கி முன்பு முற்றுகை போராட்டம் நடத்தப்படும். இதில் மாநில தலைவர் பாலகிருஷ்ணன் எம்.எல்.ஏ. கலந்து கொள்கிறார். ஆகவே தாங்கள் விவசாயிகளின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டும்.

இவ்வாறு அந்த மனுவில் குறிப்பிட்டுள்ளனர்.

## தாமிரபரணி பாசன விவசாயிகளுக்காக போராட தயாராக உள்ளோம் ஏரலில் நடந்த விவசாயிகள் மாநாட்டில் நல்லகண்ணு – வைகோ பேச்சு

தாமிரபரணி பாசன பகுதி விவசாயிகளுக்காக எந்நேரத்திலும் விவசாயிகளுடன் போராட தயாராக உள்ளோம் என ஏரலில் நடந்த விவசாயிகள் மாநாட்டில் நல்லகண்ணு, வைகோ பேசினர்.

மாநாடு

தூத்துக்குடி மாவட்ட தாமிரபரணி நதிநீர் பாதுகாப்பு பேரவை சார்பில் விவசாயிகள் வாழ்வாதார விழிப்புணர்வு மாநாடு ஏரல் ராசி திருமண மண்டபத்தில் நடந்தது. நதிநீர் பாதுகாப்பு பேரவை தலைவர் நயினார் குலசேகரன் தலைமை தாங்கினார். விவசாயி சம்பத் மாநாட்டை தொடங்கி வைத்தார். விவசாயி சிவஞானவேல் வரவேற்றார்.

நல்லகண்ணு பேச்சு

இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் தேசிய கட்டுப்பாட்டு குழு தலைவர் ஆர்.நல்லகண்ணு கலந்து கொண்டு பேசினார். அவர் கூறியதாவது:–

தாமிரபரணி ஆறு நமக்கு முன்னோர்கள் கொடுத்த சொத்து. இதனை பாதுகாப்பது நமது கடமையாகும். அதனை நாம் பாதுகாக்க தவறினால் நமது சந்ததியினருக்கு துரோகம் செய்ததாகும். தாமிரபரணி ஆற்றில் மணிமுத்தாறு, பாபநாசம், சேர்வலாறு உட்பட அணைக்கட்டில் இருந்து தண்ணீர் தாமிரபரணி ஆற்றிற்கு வருவதால் இப்பகுதிகளில் நெல்லை மாவட்டத்தில் 40 ஆயிரம் ஏக்கரும், தூத்துக்குடி மாவட்டத்தில் 46 ஆயிரத்து 107 ஏக்கர் நிலங்களும் விவசாயம் நடந்து வருகிறது.

தற்போது தொழிற்சாலைகளுக்கு தண்ணீர் எடுக்கும் திட்டத்தால் ஆபத்து வந்துவிட்டது. தூத்துக்குடி மாவட்டத்தில் தாமிரபரணி ஆற்றில் 8 அணைகள் உள்ளது. இதில் மருதூர் அணை 505 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டது. இப்போது அந்த அணையில் இருந்து தண்ணீர் தூத்துக்குடிக்கு கொண்டு செல்லும் திட்டம் உள்ளது. இந்த திட்டம் நிறைவேறினால் வருங்காலத்தில் விவசாயம் முற்றிலும் இப்பகுதியில் அழியும் நிலை ஏற்படும்.

நாங்கள் தூத்துக்குடி மக்களுக்கு தண்ணீர் கொண்டு செல்ல வேண்டாம் என சொல்லவில்லை. அதற்கு மாற்று திட்டமாக முக்காணி பகுதியில் அணைகட்டி தண்ணீர் கொண்டு செல்லுங்கள் என சொல்லுகிறோம். விவசாயிகள் தாமிரபரணியை பாதுகாக்க பெரிய போராட்டம் நடத்திட வேண்டும். அதில் நானும் கலந்து கொள்வேன்.

இவ்வாறு நல்லகண்ணு பேசினார்.

வைகோ பேச்சு

கூட்டத்தில் ம.தி.மு.க பொதுச்செயலாளர் வைகோ பேசியதாவது:–

தாமிரபரணி நதி என்பது கங்கை நதியைவிட மூத்த நதியாகும். புராணக்காலத்திலேயே இந்த நதியை வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர். தூத்துக்குடி பகுதிக்கு தண்ணீர் கொடுப்பதற்காக 46ஆயிரத்து 107 ஏக்கர் விவசாய நிலங்களை அழிப்பதா? விவசாயமும் பாதுகாக்க வேண்டும். அதே நேரத்தில் தூத்துக்குடிக்கும் தண்ணீர் கொடுக்க வேண்டும்.

அதற்காக சேர்ந்தமங்கலம் அருகில் ஒரு லோயர் டேம் அமைத்து தூத்துக்குடிக்கு தண்ணீர் கொண்டு செல்ல வேண்டும்.

2011–ல் தூத்துக்குடி பகுதி மக்களுக்கு தண்ணீர் பிரச்சினை தீர்க்கப்படும் என முதல்வர் அறிவிக்கிறார். அதற்கான திட்டமும் உடன் தயார் செய்து மருதூர் அணையிலிருந்து தண்ணீர் எடுக்க திட்டம் அனுப்பபடுகிறது.

அதற்கு பொதுப்பணித்துறை அதிகாரியாக இருந்த சம்பத்குமார் இத்திட்டத்தினால் விவசாயம் அழிந்துவிடும் என இத்திட்டத்தை திருப்பி அனுப்பினார். ஆனால் தற்போது இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டம் செயல்படுத்தினால் விவசாயம் அழிந்துவிடும். எனவே கடலுக்கு செல்லும் 10 டி.எம்.சி தண்ணீரை அணைகட்டி முக்காணியில் தடுத்து அந்த தண்ணீரை தூத்துக்குடி மக்களுக்கு கொண்டு செல்ல வேண்டியதுதானே.

தூத்துக்குடி தொழிற்சாலைக்கு நாள் ஒன்றுக்கு ஒன்றரை கோடி லிட்டர் தண்ணீர் கொண்டு செல்லப்படுகிறது. உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் தொழிற்சாலைகளுக்கு தண்ணீர் கொண்டு செல்லும் திட்டத்தை நிறுத்தி தூத்துக்குடி மக்களுக்கு தண்ணீர் கொடுக்க வேண்டும். எனவே மருதூர் அணையில் இருந்து தண்ணீர் எடுக்கும் திட்டத்தை அரசு கைவிட வேண்டும். விவசாயிகளை பாதுகாக்க வேண்டும். விவசாயிகள் நடத்தும் எந்த ஒரு போராட்டத்திலும் நாங்களும் கலந்து கொள்வோம்.

இவ்வாறு வைகோ பேசினார்.

<u>கலந்து கொண்டவர்கள்</u>

ஏரல் சேர்மன் அருணாசல சுவாமி கோவில் பரம்பரை அக்தார் அ.ரா.க.அ. கருத்தப்பாண்டிய நாடார், நகர பஞ்சாயத்து தலைவர் பாலகிருஷ்ணன், மாவட்ட ம.தி.மு.க செயலாளர் ஜோயல், இந்திய கம்யூனிஸ்டு மாவட்ட செயலாளர் மோகன்ராஜ், வியாபாரிகள் சங்கம் செயலாளர் தசரபாண்டியன், தாமிரபரணி பாசன உரிமை பாசன சங்கம் வியனரசு, வெற்றிலை கொடிக்கால் சங்கம் தலைவர் சதிஷ்குமார், சூளைவாய்க்கால் முன்னாள் பஞ்சாயத்து தலைவர் சாதிக்குல்அமீன், வியாபாரிகள் சங்க செயலாளர் தர்மராஜ், மாவட்ட விவசாய சங்க தலைவர் ராமையா, மாவட்ட பா.ஜ.க விவசாய அணியை சேர்ந்த ஏரல் கருப்பசாமி உள்பட திரளான விவசாயிகள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. நல்லாசிரியர் வில்சன் வெள்ளையா நன்றி கூறினார்.

நிறுவனர்: டி.வி.ராமசுப்பையர்

## கால்வாயை சீர்செய்ய களத்தில் இறங்கிய விவசாயிகள் முட்டுக்கட்டை போட்ட ஆக்கிரமிப்பாளர்கள்

மேலூர் : மேலூர் அருகே கால்வாய்களை சீர்செய்யாததால், விவசாய பணிகளை மேற்கொள்ள இயலவில்லை எனக் கூறி, விவசாயிகள் தாங்களே முன் வந்து கால்வாய்களை தூர் வாரினர். இதற்கு ஆக்கிரமிப்பாளர்கள் எதிர்ப்பு தெரிவித்ததால், பொதுப்பணித்துறை அலுவலகத்தை விவசாயிகள் முற்றுகையிட்டனர்.

மேலூர் பகுதிக்கு பெரியாற்று கால்வாய் தண்ணீர் திறந்து ஆறு நாட்கள் ஆகின்றன. புலிப்பட்டியில் இருந்து எட்டிமங்கலம் வழியாக இத்தண்ணீர், குறிச்சி கண்மாய் செல்கிறது. கண்மாய்கள் இல்லாமல் கால்வாயின் நேரடி பாசனத்தில் எட்டிமங்கம் சுந்தரராஜபுரம் பகுதி, விவசாய வசதி பெறுகிறது. இதனால் வரத்து கால்வாய்களை சீர் செய்து தரும்படி விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். பொதுப்பணித்துறை அதிகாரிகள் சீர்செய்யாததால் நேற்று கால்வாய்களை சீர்செய்யும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டனர்.

ராஜேந்திரன் : அதிகாரிகளிடம் பலமுறை கூறியும், எந்த நடவடிக்கையும் இல்லை. சுந்தரராஜபுரத்தில் கால்வாய் மூலம் நேரடியாக 114 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகிறது. தண்ணீர் திறந்து ஒரு வாரம் ஆகியும், கால்வாய் சீர் இல்லாததால் விவசாய பணிகளை துவங்க முடியவில்லை. இதனால் 40 பேருடன் சேர்ந்து கால்வாய்களை சீர் செய்யும் பணியில் இறங்கினோம்.

கைலாசபதி : கால்வாய் அருகில் ஆக்கிரமிப்பு செய்துள்ள சிலர், தூர்வார எதிர்ப்பு தெரிவித்தனர். இதனால் எங்களால் முழுமையாக ஈடுபட முடியவில்லை. அதிகாரிகள் இதுகுறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும், என்றனர்.

பின், விவசாயிகள் மேலூர் பொதுப்பணித்துறை அலுவலகத்தை முற்றுகையிட்டு, செயற்பொறியாளர் செல்வராஜிடம் மனு கொடுத்தனர். உடனடியாக ஆக்கிரமிப்பு அகற்றப்படும் என அவர் உறுதி அளித்தார்.

## காய்கறி சேகரிப்பு மையத்தில் இருந்து சென்னைக்கு தினசரி 2 டன் வினியோகம்

திருவள்ளூர்:காய்கறிகள் சேகரிப்பு மையத்தில் இருந்து, தினசரி, 2.3 டன் காய்கறிகள், சென்னை நகருக்கு விற்பனைக்காக கொண்டு செல்லப்படுகின்றன. திருவள்ளூர் மாவட்டத்தில், பெருநகர காய்கறி தொகுப்பு வளர்ச்சித் திட்டத்தின் கீழ், காய்கறிகள் சாகுபடி செய்ய, தோட்டக்கலைத் துறை மூலம், 65 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இக்குழுவில், உள்ள 987 விவசாயிகள் மூலம், மாவட்டத்தில், 1,696 ஹெக்டேரில் காய்கறிகள் பயிரிடப்பட்டுள்ளன.

இவர்கள் விளைவிக்கும் காய்கறிகளை, விற்பனை செய்வதற்காக, சோழவரம் ஒன்றியம், மல்லியங்குப்பம் கிராமத்தில், பரீட்சார்த்தமாக, கடந்த மாதம், 1ம் தேதி முதல், காய்கறிகள் சேகரிப்பு மையம் துவக்கப்பட்டுள்ளது.

இங்கு, கத்தரிக்காய், வெண்டைக்காய், அவரை, புடலை போன்ற காய்களும், கீரை வகைகளும் கொண்டு வரப்படுகின்றன.

இவற்றை, வில்லிவாக்கம், தி.நகரில் உள்ள காய்கறி மார்க்கெட்டிற்கு, விவசாயிகள் நேரடியாக கொண்டு சென்று, விற்பனை செய்து வருகின்றனர்.

இதுகுறித்து, தோட்டக்கலைத் துறை அலுவலர் ஒருவர் கூறுகையில், “இத்திட்டத்தில் கிடைத்துள்ள வரவேற்பை அடுத்து, விரைவில், காய்கறிகள் அதிகம் விளைவிக்கப்படும், திருத்தணி ஒன்றியம் தாடூர், திருவள்ளூர் ஒன்றியம், காக்களூர், பூந்தமல்லி ஒன்றியம், அமுதுார்மேடு ஆகிய இடங்களில், காய்கறிகள் சேகரிப்பு மையம் துவக்கப்படும்," என்றார்.

## அதிக லாபம் தரும் செம்மர நாற்றுகள்

கும்மிடிப்பூண்டி:அதிக லாபம் தரும் செம்மர நாற்றுகளை, ஓடிசா, ஆந்திரா மற்றும் வட மேற்கு தமிழக பகுதியைச் சேர்ந்தவர்கள், ஆர்வமுடன் வாங்கி செல்கின்றனர். தைலம், செம்மரம், தேக்கு, வேங்கை போன்ற வகை நாற்றுகளை மழைக்காலங்களில் நிலத்தில் நடுவதோடு சரி, அதன்பின்னர் தண்ணீர் விடுவது, களை பறிப்பது உள்ளிட்ட

எந்த பராமரிப்புமின்றி தானாக வளர கூடியவை. இதனால் மேற்கண்ட நாற்றுகள் மழைக்-காலங்களில் மட்டுமே விற்கப்படும்.

மற்ற மரங்களை விட, பல மடங்கு அதிக விலையில் விற்கப்படுவது செம்மரம் என்பதால், அதன் நாற்றுகளை வாங்குபவர்கள் கணிசமாக அதிகரித்துள்ளனர். செம்மரங்களை வளர்ப்பதில் எந்த தடையும் இல்லை என்றாலும், அதை வெட்டும் போது, வன துறையினரிடம் முறையான அனுமதி பெற்ற பின்னரே வெட்ட வேண்டும். அவ்வாறு வெட்டப்படும் செம்மரங்களை, வன துறையின் அங்கீகரிக்கப்பட்ட விற்பனை-யாளரிடம் மட்டுமே விற்க வேண்டும்.

25 ஆண்டுகள் முதல், 40 ஆண்டுகள் வரையிலான திடமான செம்மரம், தேக்கு மரத்தை விட, ஐந்து மடங்கு கூடுதல் விலைக்கு விற்கப்படுகிறது. உலகளவில் செம்மர தேவை அதிகரித்து வரும் நிலையில், அதன் மதிப்பு, ஆண்டு தோறும் அதிகரித்து வருகிறது. கும்மிடிப்பூண்டி அடுத்த, தாணிப்பூண்டி கிராமத்தில் செம்மர நாற்றுகள் விற்கப்படுகின்-றன. 15 ரூபாய்க்கு, ஒரு நாற்று என, விற்கப்படுகிறது.

### தழைச்சத்து முறையாக கிடைக்க இயற்கை முறையில் விவசாயம்

திருவெண்ணெய்நல்லூர்:திருவெண்ணெய்நல்லூர் பகுதியில் விவசாயிகள் இயற்கைமுறையில் விவசாயம் செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். பழங்காலத்தில் விவசாயத்தில் இயற்கை முறை பின்பற்றப்பட்டு வந்ததால், விவசாய பயிர்கள் செழித்து வளர்ந்தது. நாகரிக வளர்ச்சியால் ரசாயன முறையில் விவசாயிகள் பயிரிடுவதால் படிப்படியாக மனிதர்களுக்கு ஆரோக்யம் குறைந்தது. தற்போது சம்பா பருவம் துவங்கியிருப்பதால், திருவெண்ணெய்நல்லூர் அடுத்த தடுத்தாட்கொண்டூர் பகுதி விவசாயிகள் இயற்கை முறையில் விவசாயம் செய்கின்றனர். நெல் நடவிற்கு முன்பு தழைச்சத்து கிடைத்திட நிலத்தில் தண்ணீர் பாய்ச்சி வேம்பு, நுனா, எருக்கு போன்ற இலைகளை வெட்டி போட்டனர். இது குறித்து விவ சாயிகள் கூறுகையில், இயற்கை முறையில் விவசாயம் செய்வதால் உரத்தின் தேவை குறை வதாகதெரிவித்தனர்.

## மக்கா சோளம் விளைச்சல் "ஜோர்

சின்னசேலம்:சின்னசேலம் பகுதிகளில் பயிரிடப்பட்டுள்ள மக்கா சோளம் அதிக விலைக்கு விற்கப்படுமா என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

சின்னசேலம் தாலுகாவில் தொட்டியம், எலவடி, கூகையூர் உள்ளிட்ட 30க்கும் மேற்பட்ட கிராமங்களில் 500க்கும் மேற்பட்ட ஏக்கரில் மக்கா சோளம் பயிரிட்டுள்ளனர். மூன்று மாத பயிரான மக்கா சோளம் கடந்த ஜூலை மாதம் பயிரிட்டுள்ளனர். அறுவடைக்கு தயாராக மக்கா சோளம் உள்ளது. கடந்த ஆண்டு ரூ 800-900 வரை விற்கப்பட்டது. பருவ மழை இல்லை, உரம் விலை அதிகரிப்பு உள்ளிட்ட காரணங்களால் விவசாயிகள் அதிகம் செலவு செய்துள்ளனர்.

இதனால் இந்த வருடம் அதிக விலைக்கு மக்கா சோளம் விற்கப்படுமா என்று சின்னசேலம் பகுதி விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

## தமிழகம், கேரளாவில் முட்டை விலை 330 காசுகளாக நிர்ணயம்

நாமக்கல்: தமிழகம், கேரளாவில், முட்டை விலை, 330 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. முட்டை விலை தொடர்ந்து உயர்ந்து வருவது, பண்ணையாளர்களை மகிழ்ச்சியடையச் செய்துள்ளது. நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம், நேற்று, நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து, பண்ணையாளர்கள் விவாதித்தனர். அதையடுத்து, 320 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை, பத்து காசுகள் அதிகரித்து, 330 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டது. தற்போது நுகர்வு அதிகரித்து வருவதால், முட்டை விலையும் உயர்ந்துள்ளது. இது, பண்ணையாளர்களை மகிழ்ச்சியடையச் செய்துள்ளது. நாட்டின் பிற மண்டலங்களில், முட்டை விலை (காசுகளில்) நிலவரம்: சென்னை, 318, பெங்களூரு, 320, மைசூரு, 320, ஹைதராபாத், 308, மும்பை, 340, விஜயவாடா, 317, கோல்கத்தா, 352, பர்வாலா, 312, டில்லி, 323.இவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

நாமக்கல்லில், நேற்று நடந்த பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழு

கூட்டத்தில், முட்டைக் கோழி விலை கிலோ, 58 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டது. பல்லடத்தில் நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், அதன் விலை கிலோ, 55 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டது.

## மஞ்சளுக்கு ஆதார விலை விவசாய சங்கம் கோரிக்கை

ராசிபுரம்: "மஞ்சளுக்கு ஆதார விலையாக, 12,000 ரூபாய் வழங்க வேண்டும்' என, கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில், ராசிபுரம் தாலுகா குழுக் கூட்டம், நேற்று நடந்தது. சங்க தலைவர் முத்துசாமி தலைமை வகித்தார். மாவட்ட துணைத் தலைவர் கந்தசாமி முன்னிலை வகித்தார்.

கூட்டத்தில், கொப்பரை தேங்காய் விலையின் வீழ்ச்சியை கட்டுப்படுத்தி, ஆதார விலையாக கிலோவுக்கு, 75 ரூபாய் நிர்ணயம் செய்ய வேண்டும். விலை வீழ்ச்சியை கட்டுப்படுத்த வேண்டுமானால், மத்திய அரசு, தேங்காய் எண்ணெய், புண்ணாக்கு ஆகியவற்றை இறக்குமதி செய்வதை கைவிட வேண்டும்.

கடந்த ஆண்டுபோல், மஞ்சள் குவிண்டால் ஒன்றுக்கு, அதிகபட்ச விலையாக, 5,000 முதல், 6,000 ரூபாய் வரை விற்பனையாகி வருகிறது. ஆனால், குவிண்டாலுக்கு, 9,000 ரூபாய் வரை உற்பத்தி செலவாகிறது. கடும் விலை வீழ்ச்சியை கட்டுப்படுத்த, அரசு கூட்டுறவு கொள்முதல் நிலையங்களில், மஞ்சள் குவிண்டலுக்கு ஆதார விலையாக, 12,000 ரூபாய் வழங்க வேண்டும் என்பது உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.சங்க நிர்வாகிகள் சபாபதி, சுப்ரமணி, மகேஸ்வரன், பழனிவேல் உள்பட பலர் பங்கேற்றனர்.

## திருந்திய நெல் சாகுபடி விவசாயிக்கு அழைப்பு

ராசிபுரம்: ராசிபுரம் வேளாண் உதவி இயக்குனர் வருதராஜ் வெளியிட்ட அறிக்கை: திருந்திய நெல் சாகுபடி முறையில், ஒரு ஏக்கருக்கு, இரண்டு கிலோ விதை போதுமானது. ஒரு ஏக்கரில், நெல் நடவு செய்ய, ஒரு மீட்டர் அகலம், எட்டு மீட்டர் நீளம் கொண்ட, ஐந்து மேட்டு பாத்திகளை அமைத்து விதைக்க வேண்டும்.

பின்னர், 14 நாட்கள் ஆன இளம் நாற்றுகளை, வயல்களில், 22.5 செ.மீ.,க்கு, 22.5 செ.மீ., இடைவெளியில், குத்துக்கு ஒரு நாற்று வீதம் நடவு செய்ய வேண்டும். பத்து நாட்கள் இடைவெளியில், நான்கு முறை கோனாவீடர் கருவியை பயன்படுத்தி களையெடுக்க வேண்டும்.

இலை வண்ண அட்டையை பயன்படுத்தி, தேவையான தழைச்சத்தினை மேல் உரமாக இடவேண்டும். இந்த தொழில் நுட்பத்தை பின்பற்றினால், சாகுபடி செலவு குறைவதுடன், ஒரு ஏக்கருக்கு, 500 முதல், 1,000 கிலோ வரை, கூடுதல் மகசூல் கிடைக்க வாய்ப்புள்ளது.

### நவீன இயந்திரம் மூலம் நாற்று நடவு பணி அறிமுகம் : மோகனூர் வட்டார விவசாயிகள் ஆர்வம்

மோகனூர்: மோகனூர் வட்டாரத்தில் உள்ள குமரிபாளையம், ஆரியூர், செங்கப்பள்ளி ஆகிய கிராமங்களில், அதிநவீன இயந்திரம் மூலம் நாற்று நடவு செய்யும் பணி, முன்னோடி விவசாயிகள் வயல்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மோகனூர் வட்டாரத்தில், தற்போது மழையளவு சரியான தருணத்தில் பெய்துள்ளதாலும், மேட்டூர் அணையில் இருந்து, சாகுபடிக்காக தண்ணீர் திறக்கப்பட்டுள்ளதாலும், நெல் நடவு பணி துரிதமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வேளாண் தொழிலில் நாற்று நடவு செய்ய, களை எடுக்க, விதை விதைக்க, விளைந்த பயிர்களை அறுவடை செய்ய என, அனைத்து பணிகளுக்கும் ஆட்கள் தேவை என்பது அனைவரும் அறிந்த ஒன்று. தற்போது, கூலி ஆட்கள் பற்றாக்குறை காரணமாக, விவசாயிகள், சாகுபடி செய்வதற்கு வழி தெரியாமல், விழிபிதுங்கி உள்ளனர். அனைத்து விவசாயப் பணிகளுக்கும், ஆட்கள் பற்றாக்குறையை சமாளிக்க, இயந்திரம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அறுவடை செய்வதற்கு மட்டுமே, இயந்திரம் பயன்படுத்தப்பட்ட வந்த நிலையில், தற்போது நாற்று நடவு செய்வதற்கும், இயந்திரம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

நெல் நாற்று நடும் இயந்திரம், மற்ற மாவட்டங்களில் மட்டுமே பயன்படுத்தப்பட்டு வந்தது. நாமக்கல் மாவட்டத்தில், மோகனூர் வட்டாரத்தில், முதன் முறையாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஆட்கள் பற்றாக்குறைக்கு நிரந்தர தீர்வாகவும், குறைந்த

வயதுடைய நாற்றுகள், சரியான இடைவெளியில் நடப்பட்டு, திருந்திய நெல் சாகுபடி முறையில் நடவு செய்யப்படுகிறது.

இயந்திரம் மூலம் நெல் நடவுக்கு தேவையான நாற்றங்கால், சரியான விதை தேர்வு செய்யப்பட்டு, விதை நேர்த்தி செய்து, இயந்திரம் மூலம் டிரேயில் விதைக்கப்படுகிறது. பின் டிரேயை முறையாக பசுமைகுடிலில், 15 நாட்கள், விஞ்ஞான முறைப்படி பராமரிக்கப்பட்டு, வயலுக்கு தேவையான அளவு நாற்றுகள் கொண்டு வரப்பட்டு, இயந்திரம் மூலம் நடவு செய்யப்படுகிறது.

அதனால், நாற்றங்கால் பராமரிப்பு செலவு குறைவு. ஒரு ஏக்கருக்கு தேவையான நாற்றங்கால், சரியான முறையில் பராமரிக்கப்படுவதால், நோய் மற்றும் பூச்சிகள் தாக்குதல் குறைந்து, வீரிய நாற்றுகள் வயல்களில் நடப்படுகிறது. நெல் நடவு இயந்திரம் பயன்படுத்தப்படுவது காலத்தின் கட்டாயம்.

அதன் மூலம் ஆட்கள் செலவு குறைவதுடன், குறைந்த வயது மற்றும் வளமான நாற்றுகள், குறித்த நேரத்தில் நடவு செய்வதன் மூலம் கூடுதல் மகசூல் பெற முடியும். ஒரு ஏக்கர் நடவு செய்ய, 65 முதல், 75 டிரேக்கள் தேவைப்படுகிறது. இயந்திரம் மூலம் நடவு செய்ய வாடகை, மொத்தம் டிரே ஒன்றுக்கு, 73 ரூபாய் வீதம், ஏக்கருக்கு, 5,500 முதல், 6,000 ரூபாய் வரை மட்டுமே வழங்கப்பட்டு வருகிறது.

"மோகனூர் வட்டாரத்தை சேர்ந்த விவசாயிகள், உதவி வேளாண் அலுவலர்களை சந்தித்து, இயந்திரம் மூலம் நடவு செய்துள்ள விவசாயிகளின் வயல்களை பார்வையிட்டு, தாங்களும் இயந்திரம் மூலம் நடவு செய்து பயன்பெறலாம்' என, வட்டார வேளாண் உதவி இயக்குனர் விஜயராகவன் தெரிவித்துள்ளார்.

### பசுமையான கேர்மாளம் விவசாயிகள் மகிழ்ச்சி

கேர்மாளம் மலைப்பகுதியில் தொடர்ந்து பெய்யும் மழையால், விவசாய நிலங்கள் புத்துயிர் பெற்று, பசுமையாக காட்சி அளிக்கிறது.

சத்தியமங்கலம் அடுத்த திம்பம் மலைப்பகுதியில் இருந்து, கொள்ளேகால் செல்லும் வழியில் உள்ளது, கேர்மாளம். தமிழக எல்லையில் அமைந்துள்ள மலை கிராமமாகும்.

இப்பகுதியில் கடந்த சில மாதங்களாக, தொடர்ந்து பலத்த மழை பெய்தது. தொடர் மழையால், கேர்மாளத்தில் உள்ள குளம், குட்டைகளில் தண்ணீர் தேங்கி நின்றது. விவசாய நிலத்தில் பயிரிடப்பட்ட மக்காச்சோளம், உருளைகிழங்கு, ராகி உள்ளிட்ட பயிர்கள் யாவும், தொடர் மழையால் செழித்து, பசுமையாக காட்சி அளிக்கிறது. சில ஆண்டாக பருவமழை பொய்த்ததால், ஏமாற்றத்தில் இருந்த கேர்மாளம் விவசாயிகள், தொடர் மழையால் பச்சை பசேல் என காட்சி அளிக்கும் விவசாய நிலத்தை கண்டு மகிழ்ச்சியில் உள்ளனர்.

அதேபோல், கேர்மாளத்தில் இருந்து, கடம்பூர் செல்லும் ரோட்டில், கண்ணுக்கு எட்டிய தூரம் வரை பசுமையாக காட்சி அளிப்பதால், சுற்றுலா பயணிகளும் மகிழ்ச்சியில் உள்ளனர். தொடர் மழை பெய்தால், மலைப்பகுதியில் உள்ள விவசாயம் நன்கு நடப்பதுடன், வனவிலங்குகள், வனத்தைவிட்டு வெளியே வராமல், வனத்துக்குள்ளேயே, தங்கள் வாழ்க்கையை நடத்தும் என்பதால், இன்னும் சில மாதங்களுக்கு அவற்றின் தொல்லை இருக்காது. பயிர், உயிர் சேதம் இருக்காது, என்றனர்.

## புதுகை மத்திய கூட்டுறவு வங்கி முடிவு : ரூ.100 கோடி வட்டியில்லா பயிர்க்கடன்

புதுக்கோட்டை: புதுக்கோட்டையில் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின், 93வது பொதுப்பேரவை கூட்டம் நடந்தது. தலைவர் செல்லத்துரை தலைமை வகித்தார். இயக்குனர்கள் மற்றும் தொடக்கவேளாண்மை கூட்டுறவு வங்கி, நகர கூட்டுறவு வங்கி உள்ளிட்ட கூட்டுறவு கடன் சங்கங்களின் தலைவர்கள், வங்கி அதிகாரிகள் பலர் பங்கேற்றனர். வங்கியின் மேலாண்மை இயக்குனர் குமார் பேசியதாவது: புதுக்கோட்டையில், 1920ம் ஆண்டு, 4 ஆயிரம் ரூபாய் பங்கு முதலீட்டில் துவங்கப்பட்ட மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி, 93 ஆண்டுகளாக உறுப்பினர்கள், விவசாயிகள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு சேவை செய்து வருகிறது. மாவட்டம் முழுவதும், 23 கிளைகளுடனும், 245 இணைப்பு சங்கங்களுடனும் இயங்கி வருகிறது. கடந்த ஆண்டு, 7 கோடி ரூபாய் லாபம் ஈட்டியுள்ளது. இதன்மூலம் உறுப்பினர்களுக்கு, 10 சதவீத ஈவுத்தொகை வழங்கப்பட்டது. இந்த ஆண்டு லாபத்தொகையை அதிகரிக்கச் செய்து உறுப்பினர்களுக்கு, 14 சதவீத ஈவுத்தொகை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

விவசாயத்துக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. மாவட்டத்தில் உள்ள, 136 தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் மூலம், விவசாயிகளுக்கு பயிர்க்கடனாக, 93 கோடி ரூபாய், வேளாண் சார்ந்த தொழில்கள் மற்றும் சுயஉதவிக் குழுக்களுக்கு, 17 கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டுள்ளது. வீட்டுவசதி கடன், மகளிர் கடன் மற்றும் இதர கடனாக, 655 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

வறட்சியினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட குறுகிய கால பயிர்க்கடன், 9 கோடி ரூபாய் மத்திய காலக்கடனாக மாற்றப்பட்டது. இவை தவிர நகைகடனாக, 370 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. தானிய ஈட்டுக்கடனாக, 11 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி சார்பில் கடந்த ஆண்டு மீமிசல், வடகாடு ஆகிய பகுதிகளில் புதிய கிளைகள் திறக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு மேலும், 5 இடங்களில் புதிய கிளைகள் திறக்கப்பட உள்ளது. கம்ப்யூட்டர் மற்றும் ஏ.டி.எம்., வசதிகளுடன் வங்கி சேவையை நவீனமயமாக்கும் நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளது. இந்த ஆண்டு வாடிக்கையாளர்களிடமிருந்து வைப்புத்தொகையாக, 450 கோடி ரூபாய் திரட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இதுவரை 400 கோடி ரூபாய் திரட்டப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு வட்டியில்லா பயிர்க்கடனாக, 100 கோடி ரூபாய் வழங்க குறியீடு நிர்ணயிக்கப்பட்டு, இதுவரை, 44 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் பேசினார்.

## உச்சத்தில் இஞ்சி விலை மல்லி, புதினாவும் உயர்வு

திண்டுக்கல் : காய்கறியில் இஞ்சி அதிகபட்சமாக கிலோ ரூ. 100 க்கும், பட்டர் பீன்ஸ், சோயா பீன்ஸ், கருணை கிழங்கு போன்றவை கிலோ ரூ. 60 லிருந்து 70 க்கும் விற்கப்படுகிறது. வாசனைக்காக பயன்படுத்தப்படும் கொத்த மல்லி கிலோ ரூ. 50 க்கும்,

புதினா ரூ. 40 க்கும் விற்கப்பட்டது.

காய்கறி உற்பத்தியில் அதிக ஆர்வம் செலுத்தி வந்த மாவட்ட விவசாயிகள், கடந்த இரண்டு ஆண்டுகளாக மழை இல்லாததால் சோர்ந்துள்ளனர்.

தற்போது வட கிழக்கு பருவ மழையை நம்பி விவசாய பணிகளை துவங்கியுள்ளனர். வரத்து இல்லாததால் திண்டுக்கல் காய்கறி சந்தையில் அவற்றின் விலை தொடர்ந்து உச்சத்திலேயே உள்ளது.

இஞ்சியின் விலை கடந்த பல வாரங்களாக கிலோ ரூ. 100 க்கு விற்கப்படுகிறது. பட்டர் பீன்ஸ், சோயா பீன்ஸ், கருணை கிழங்கு போன்றவை கிலோ ரூ. 60 லிருந்து 70 வரை விற்கப்படுகின்றன. சின்ன வெங்காயம் கிலோ ரூ. 55 க்கும், பல்லாரி ரூ. 50 க்கும் விற்கப்படுகிறது. வாசனைக்காக பயன்படுத்தப்படும் கொத்த மல்லி தழை கிலோ ரூ. 50 க்கும், புதினா ரூ. 40 க்கும் விற்கப்பட்டது. தவிர்க்க முடியாத காய்களான கத்தரிக்காய் ரூ. 40 க்கும், தக்காளி ரூ. 12 க்கும், முருங்கைக்காய் ரூ. 30 க்கும் விற்கப்பட்டது. உருளை கிழங்கு, முட்டை கோஸ், சேனை கிழங்கு போன்றவை தலா ரூ. 20 க்கு விற்கப்பட்டன. தொடர்ந்து காய்கறிகளின் விலை உச்சத்தில் இருப்பதால், பெரும்பாலானவர்கள் தங்களின் அன்றாட பயன்பாட்டிற்கு தேவையான காய்களை மட்டுமே வாங்கிச் செல்வதில் ஆர்வம் காட்டினர்.

## தேனி மாவட்டத்தில் விவசாய பொருட்கள் திருட்டுஅதிகரிப்பு ஆடு,கோழிகளும் திருடப்படுவதால் விவசாயிகள் தவிப்பு

தேனி : தேனி மாவட்டத்தில் விவசாய பொருட்கள், திருட்டு அதிகரித்து வருகிறது. ஆடுகளும் திருடப்படுவதால் விவசாயிகள் தவித்து வருகின்றனர். தேனி மாவட்டத்தில், எப்போதும் இல்லாத அளவுக்கு இப்போது விவசாய பொருட்கள் திருட்டு அதிகரித்து உள்ளது. தோட்டங்களில் உள்ள மின் வயர்கள், மோட்டார்களை திருடிச் சென்று விற்பனை செய்து விடுகின்றனர். அதேபோல் தேங்காய், மாங்காய், நெல், மக்காச்சோளம், வெண்டைக்காய், கத்தரிக்காய் போன்ற பல்வேறு விளை பொருட்களையும் திருடி விடுகின்றனர்.

விவசாயிகள் பெரும்பாலும் ஆடு, மாடு, கோழி போன்ற கால்நடை வளர்ப்பில் அதிகம் ஈடுபடுகின்றனர். தற்போது ஒரு கும்பல் ஆடு, கோழிகளை திருடுவதை வாடிக்கையாக வைத்துள்ளது. தேனியில் ஆடுகளை திருடிய மூன்று பேரை போலீசார் கைது செய்தனர். அதேபோல் ராஜதானியில் இரண்டு பேர் கைது செய்யப்பட்டனர். மாவட்டத்தில் கடந்த ஒரு வாரத்தில் 12 இடங்களில் ஆடுகள் திருடு போனதாக புகார்கள் பதிவாகி உள்ளன.

ஆடுகளை திருடிய கும்பல் டூ வீலரில் இரவில் சென்று இரண்டு அல்லது மூன்று ஆடுகளை தூக்கி டூ வீலரில் வைத்துக் கொண்டு வேறு இடத்திற்கு சென்று விற்பனை செய்து விடுகின்றனர். மூன்று ஆடுகள் தற்போதைய விலையில் 50 ஆயிரம் ரூபாய் ஆகி விடுகிறது. இதேபோல் கோழிகளையும் திருடி விற்பனை செய்து விடுகின்றனர். பல விவசாயிகள் தயக்கத்தில் புகார் கொடுப்பதில்லை. இப்படி பெருகி வரும் திருட்டுக்களால் விவசாயிகள் செய்வதறியாது திகைத்துப்போய் உள்ளனர்.

இது குறித்து போலீஸ் அதிகாரிகளிடம் கேட்ட போது, தினமும் கிராமப்பகுதிகளிலும் போலீஸ் ரோந்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பொதுமக்கள் சந்தேகப்படும் நபர்கள் மீது புகார் செய்தால், அவர்களை விசாரிக்க உத்தரவிடப்பட்டுள்ளது, என்றனர்.

### 18ம் கால்வாய் அக்., 10ல் திறப்பு விவசாயிகள் கூட்டத்தில் முடிவு

தேனி : தேனியில் நடந்த பொதுப்பணித்துறை- விவசாயிகள் ஆலோசனை கூட்டத்தில் அக்., 10ம் தேதி 18ம் கால்வாய் திறக்க தமிழக அரசுக்கு பரிந்துரை செய்வது, என முடிவு எடுக்கப்பட்டது.

18ம் கால்வாய் திறப்பது குறித்து, பொதுப்பணித்துறை அதிகாரிகள் விவசாயிகள் பங்கேற்ற ஆலோசனை கூட்டம், மஞ்சளாறு வடிநில உபகோட்ட செயற்பொறியாளர் காசிபாண்டியன் தலைமையில் நடந்தது.

உதவி செயற்பொறியாளர் பாலமுருகன், 18ம் கால்வாய் விவசாயிகள் சங்க தலைவர் ராமராஜ், செயலாளர் திருப்பதி வாசகன், தமிழக விவசாயிகள் சங்க தலைவர் தேவராஜ், போடி பகுதி விவசாயிகள் வடமலைமுத்து, ராஜா உட்பட பலர் பங்கேற்றனர். வரும் அக்., 10ம் தேதி முதல் 18ம் கால்வாய் திறக்க தமிழக அரசுக்கு பரிந்துரை செய்வது, அதற்கு முன்னதாக கால்வாயினை பராமரிப்பு செய்வது, தற்போது தேவாரம் சுத்தகங்கை ஓடை வரை உள்ள 18ம் கால்வாயினை கொட்டகுடி ஆறு வரை நீடிப்பு செய்யும் வகையில் அரசினை கேட்டுக்கொள்வது. கால்வாய் நீடிக்கப்படும் பட்சத்தில் 34 கிராமங்கள் கூடுதலாக பயனடையும். இதனை அரசுக்கு தெரியப்படுத்தி நடவடிக்கை எடுப்பது என முடிவு செய்யப்பட்டது.

## உணவு உப்பு உற்பத்தி அமோகம்

ராமநாதபுரம் : தேவிபட்டினம் அருகே சம்பை மற்றும் கோப்பேரிமடம், நதிப்பலாம், சித்தார்கோட்டை உள்ளிட்ட பகுதி, உப்பளங்களில் உணவு உப்பு அமோகமாக நடந்து வருகிறது. பட்டுக்கோட்டை, தஞ்சாவூர், புதுக்கோட்டை, திண்டுக்கல் உள்ளிட்ட பல மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. 25 பாக்கெட்டுகள்(ஒரு பாக்கெட் 25 ரூபாய்) கொண்ட ஒரு மூடை 650 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.

## வீணானது மழையை நம்பி விதைத்த நெல் விதை திருவாடானையில் 30 ஆயிரம் எக்டேர் பாதிப்பு

ஆர்.எஸ்.மங்கலம் : திருவாடானை தாலுகாவில் மழையை நம்பி 30 ஆயிரம் எக்டேரில் விதைத்த நெல், முளைப்பு திறனற்றதாகியதால், விவசாயிகள் நஷ்டமடைந்துள்ளனர். திருவாடானை, தொண்டி, ஆனந்தூர், ஆர்.எஸ்.மங்கலம், சோழந்தூர், மங்களக்குடி பகுதிகளில், 42 ஆயிரம் எக்டேரில் நேரடி நெல் விதைப்பு செய்யபடுகிறது. கடந்த மாதம் பெய்த மழையை பயன்படுத்தி ஆனந்தூர், ராதானூர், வரவணி, திருவாடானை, ஆர்.எஸ்.மங்கலம் உள்ளிட்ட பகுதிகளில் 30 ஆயிரம் எக்டேரில் நெல் விதைத்தனர். தொடர்ந்து மழையின்றி, முளைப்பு திறன் அற்ற நிலைக்கு மாறிவிட்டன. மேலும் மயில் உள்ளிட்ட பறவைகளுக்கு நெல் விதைகள் இறையாகி விட்டன. மீண்டும் விதை நெல், உழவிற்கு, கூடுதல் செலவு செய்யவேண்டிய நிலையில் உள்ளனர். சனவேலி விவசாயிகள் வீரமணி, பாலமுருகன் ஆகியோர் கூறியதாவது: கடந்த மாதம் பெய்த மழையை பயன்படுத்தி ஏக்கருக்கு 1,500 மற்றும் டிராக்டர் வாடகை 1,000 ரூபாய் செலவிட்டு நெல் விதைத்துள்ளோம். மழையின்றி, விதைகள் மக்கி விட்டன. மீண்டும் விதைக்க, கூடுதலாக 2500 ரூபாய் தேவைப்படுகிறது. வானம் பார்த்த பூமி என்பதால் புழுதி படிந்த வயல்களில், நேரடி நெல் விதைப்பு மட்டுமே செய்ய இயலும், நாற்றுகளை நட முடியாது, என்றனர்.

## நெல்விதை மானியம் குறித்து கலெக்டர் ஆய்வு

சிவகங்கை : கொல்லங்குடி, காளையார்கோவில், புலியடிதம்பத்தில் நெல் விதை மானியம் வழங்கும் தனியார் மற்றும் கூட்டுறவு நிறுவனங்களை கலெக்டர் ராஜாராமன் ஆய்வு செய்தார். விவசாயிகளுக்கு உரிய முறையில் விதை மானியம் கிடைக்கிறதா என்பது உள்ளிட்ட விபரங்களை கேட்டார். இணை இயக்குநர் செல்லத் துரை , அலுவலர்கள் பங்கேற்றனர்.

## மகளிர் சுய உதவிக்குழு கடன்க்கான வட்டி 14 சதவீதத்தில் இருந்து 7 சதவீதமாக குறைக்கப்படும்

தூத்துக்குடி : முதல்வர் ஜெ.,உத்தரவுப்படி தூத்துக்குடி மாவட்ட மத்திய கூட்டுறவு பாங்க் மூலம் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் கடன்களுக்கான வட்டி 14 சதவீதத்தில் இருந்து 7 சதவீதமாக பாதியாக விரைவில் குறைக்கப்பட உள்ளதாக பேரவை கூட்டத்தில் தூத்துக்குடி மாவட்ட மத்திய கூட்டுறவு பாங்க் தலைவர் பி.டி.ஆர் ராஜகோபால் தெரிவித்தார்.

தூத்துக்குடி மாவட்ட மத்திய கூட்டறவு பாங்க் 17வது பேரவை கூட்டம் நேற்று கூட்ட அரங்கில் மாவட்ட மத்திய கூட்டுறவு பாங்க் தலைவர் பி.டி.ஆர் ராஜகோபால் தலைமையில் நடந்தது. துணைப்பதிவாளர் மற்றும் முதன்மை வருவாய் அலுவலர் குமரேசன் வரவேற்றார்.

பொது மேலாளர் பரமசிவன் ஆண்டறிக்கை வாசித்தார். பேரவை தீர்மானங்களை இணைப்பதிவாளர் மற்றும் மேலாண்மை இயக்குனர் ஜானகிராமன் முன்மொழிந்தார். தூத்துக்குடி மாவட்ட கூட்டுறவு ஒன்றிய தலைவர் சுதாகர், குலையன்கரிசல் தலைவர் சுரேஷ், கூட்டுறவு அச்சக தலைவர் பொன்ராஜ், வேளாண்மை இணை இயக்குனர் (பொ) பொன்காத்த பெருமாள், கூட்டுறவு சங்கம் ராஜேந்திரன் மற்றும் பலர் பேசினர். மத்திய கூட்டுறவு பாங்க் துணைத் தலைவர் வெம்பூரார், துணைப்பதிவாளர்கள் முத்துக்கிருஷ்ணன், ஜெயசிங், சிவகாமி, கூட்டுறவுத்துறை அதிகாரி சந்திரா, மத்திய கூட்டுறவு பாங்க் தலைவரின் நேர்முக உதவியாளர் செந்தில் குமார் மற்றும் மாவட்டம் முழுவதும் இருந்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், கூட்டுறவு விற்பனை சங்கங்கள், தூத்துக்குடி மாவட்ட நுகர்வோர் மொத்த விற்பனை பண்டகசாலை தலைவர்கள், பணியாளர் கூட்டுறவு சிக்கன நாணயசங்கம்,

பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம், நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் தலைவர்கள் நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் மாவட்ட மத்திய கூட்டுறவு பாங்க் தலைவர் பி.டி.ஆர்.ராஜகோபால் பேசியதாவது;

தூத்துக்குடி மாவட்டத்தில் மத்திய கூட்டுறவு பாங்க் தலைவராக பதவி அளித்த முதல்வர் ஜெ.,க்கும், அதற்கு உறுதுணையாக இருந்த சுற்றுலாத்துறை அமைச்சர் சண்முகநாதனுக்கும் நன்றி தெரிவிக்கிறேன். கூட்டுறவு சங்கங்களின் தலைவராக பொறுப்பேற்றுள்ள அனைவருக்கும் அளிக்கப்பட்டுள்ள பொறுப்புகள் மிகவும் மகத்தானதாகும். நம்மீது நம்பிக்கை வைத்து முதல்வர் ஜெ.,மத்திய கூட்டுறவு பாங்கையும், கூட்டுறவு சங்கங்களையும் வழி நடத்தி செல்லக் கூடிய தலையாய பொறுப்பினை நம்மிடம் அளித்துள்ளார்கள். அதற்கு பாத்திரமாக நாம் நடந்து கொண்டு நாம் சார்ந்த பாங்க் மற்றும் சங்கங்களை உன்னதமான நல்ல நிலைக்கு எடுத்து செல்ல வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது. தமிழகத்தில் கூட்டுறவு சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்படும் பயிர்க்கடன்கள், விவசாயம் சார்ந்த இதர கடன்கள் மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் அறிவித்த கடன்களுக்கான இலக்கினை எந்தவித தொய்வும் இல்லாமல் உரிய பயனாளிகளுக்கு சென்றடைவதை உறுதி செய்ய வேண்டிய கடமை நமக்கு உள்ளது. பயிர்கடன்களை உரிய காலத்தில் திருப்பி செலுத்துவோருக்கு வட்டியில்லா கடன் வழங்க முதல்வர் அறிவித்துள்ளார். மக்களின் நலன்காக்க பல்வேறு திட்டங்களுக்கு கடன்கள் வழங்குவது எவ்வளவு முக்கியமோ, அந்த அளவிற்கு பொதுமக்களிடம் இருந்து வைப்பீடுகளை (டெபாசிட்) சேகரிப்பதும் நமக்கு ஒரு முக்கியமான கடமையாகும். மத்திய கூட்டுறவு வங்கியோ, தொடக்க வேளாண்மை கடன் சங்கங்களோ மற்ற சங்கங்களோ அது சார்ந்த தாய் சங்கத்திடம் இருந்து மறு நிதியுதவி பெற்று மட்டுமே கடன் வழங்கினால் அந்த சங்கங்களுக்கு ஒரு ஸ்திரத்தன்மை அளிக்காது.

சங்கங்கள் தம் சுயசார்பு தன்மையை மேம்படுத்தி கொள்ளும் வகையில் மிக அதிக அளவில் வைப்பீடுகளை சேகரிக்கும் முயற்சியில் தொடர்ந்து ஈடுபட வேண்டும். அதற்கு கூட்டுறவு சங்கங்களின் தலைவர்களாகிய நாம் முழுமையாக செயலாற்ற வேண்டும்.

மத்திய கூட்டுறவு பாங்க் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு அதிகமான அளவு ஆப்ரேட்டிங் புராபிட் சம்பாதித்துள்ளது. இந்த ஆண்டு பாங்க் நிகர லாபமாக 232 லட்சத்து

68 ஆயிரம் சம்பாதித்துள்ளது. 2010-2011ம் ஆண்டிற்கு பிறகு மத்திய கூட்டுறவு பாங்கை நபார்டு அலுவலர்கள் 2012-2013 ஆண்டு தணிக்கை செய்ய உள்ளனர். நபார்டு அறிவுரைப்படி கடந்த 2010-2011 நபார்டு தணிக்கையில் கிரார் 7 சதவீதத்திற்கு குறைவாக உள்ளதால் நம்மால் பங்குதாரர்களுக்கு டிவிடன்ட் கொடுக்க முடியவில்லை. இந்த ஆண்டு நபார்டு தணிக்கை முடிந்தவுடன் கண்டிப்பாக சங்கங்களுக்கு டிவிடன்ட் நிச்சயமாக பெற்று கொடுப்பேன்.

நமது நிர்வாகக்குழு பொறுப்பேற்றவுடன் மத்திய வங்கி பணியாளர்களுக்கு முதல்வர் அறிவித்த 15 சதவீத ஊதிய உயர்வு வழங்கப்பட்டுள்ளது. கூட்டுறவு கடன் சங்கங்களுக்கு கூடுதல் விவசாய நகைக்கடனாக 80 லட்சமும், நகைக் காசு கடனாக 2085 லட்சம், மத்திய கால கடனாக 12 லட்சம், பணியாளர் சிக்கன நாணய சங்கத்திற்கு மத்திய கால கடனாக 234 லட்சம், மத்திய கூட்டுறவு வங்கி பணியாளர்களுக்கு வீட்டு வசதி மற்றும் தனி நபர் கடனாக 16 லட்சம், நலிவடைந்த தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களை தரம் உயர்த்த சிறப்பு நகை காசுக்கடனாக 4 சங்கத்திற்கு 200 லட்சம் வழங்கப்பட்டுள்ளது.

ஒரு மாதத்தில் விவசாய கடன் 80 லட்சம் மக்ளுக்கு வழங்கி சாதனை படைத்துள்ளோம். மகளிர் சுய உதவிக்குழுவிற்கு அதிகமாக கடன் வழங்க முதல்வர் உத்தரவிட்டுள்ளார். அதோடு அவர்களுக்கு கடனுக்கு குறைந்த வட்டி பெற வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார். இதனால் மகளிர் குழுவிற்கு வழங்கப்பட்ட கடன்களுக்கு 14 சதவீத வட்டி வ‹லிக்கப்பட்டது. மிக விரைவில் இவை 7 சதவீதமாக பாதியாக குறைக்கப்பட உள்ளது.

இதர வணிக வங்கிகளை போல் வாடிக்கையாளர்களுக்கு அனைத்து வசதி மற்றும் விரைவான பணவர்த்தனை செய்யும் பொருட்டு கோர் பேங்கிங் சொலுசன் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.தென் மாவட்ட கூட்டுறவு வங்கிகளிலே ரிசர்வ் பாங்க் உரிமம் பெற்ற காசோலை நிழற்பட தவீர்வு முறை செயல்படுத்தி வரும் பாங்க்காக மத்திய கூட்டுறவு பாங்க் மாறியுள்ளது. திரேஸ்புரம், எட்டயபுரத்தில் புதிய கிளைகள் முதல்வர் உத்தரவுப்படி துவக்கப்பட்டுள்ளது. இன்னும் அதிக கிளைகள் துவக்கவும், சொந்த இடம் இல்லாத கிளைகளுக்கு சொந்த இடம் வாங்கவும், சொந்த கட்டடம் கட்டவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.இவ்வாறு ராஜகோபால் பேசினார்.

## உரிமம் பெறாத மரக்கன்றுகளை விவசாயிகள் வாங்க கூடாது

தூத்துக்குடி : விதை விற்பனை உரிமம் பெறாத, தர உத்தரவாதமற்ற வெளி மாநில மரக்கன்றுகளை விவசாயிகள் வாங்கி ஏமாற வேண்டாமென, விருதுநகர் விதை ஆய்வு துணை இயக்குநர் நாராயண பிரசாத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் தெரிவித்ததாவது, விருதுநகர் மாவட்டத்திலுள்ள பல்வேறு கிராமங்களில் ஆந்திரா மாநிலத்திலிருந்தும் உரிமம் பெறாமல் மரக்கன்றுகன் மற்றும் பழக்கன்றுகளை கொண்டு வந்து விவசாயிகளுக்கு அதிகப்படியான விலைக்கு விற்பனை செய்து வருவதாக தெரிய வருகிறது.

குறுகிய காலத்தில் மக‹ல் தரும் என போலியான வார்த்தைகளைக் கூறி தரமற்ற மரக்கன்றுகளை அவர்கள் விற்பனை செய்து வருவதாகவும் கூறப்படுகிறது. இவ்வாறு பிறமாநிலங்களிலிருந்து வரும் நபர்கள் வேன், லாரி போன்றவற்றில் பழக்கன்றுகளை கொண்டு வந்து விவசாயிகளிடம் விற்று விட்டு அந்த கிராமங்களை விட்டு சென்று விடுவதாகவும் தெரிய வருகிறது.

எனவே, மேற்படி நபர்களிடம் மரக்கன்றுகள் மற்றும் பழ மரக்கன்றுகளை விதை விற்பனை உரிமம் பெற்ற விற்பனை நிலையத்திலும், அரசுப் பண்ணைகளிலும் வா ங்கிப் பயன் பெற வேண்டுமாறு விவசாயிகள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

## காய்கறி வியாபாரிகள் கலெக்டரிடம் மனு

மதுரை: மதுரை சென்ட்ரல் மார்க்கெட்டில் உள்ள அனைத்து கட்டிட கடை காய்கறி வியாபாரிகள் நலச்சங்கத் தலைவர் ரவிச்சந்திரன், செயலாளர் தியாகராஜன், துணைச் செயலாளர்கள் முத்துப்பாண்டி, காளி உள்ளிட்டோர் நேற்று மாநகராட்சி கமிஷனர்

நந்தகோபாலிடம் மனு கொடுத்தனர். பின்னர் அவர்கள் கலெக்டர் சுப்பிரமணியனிடம் மனு கொடுத்தனர்.

மனுவில், சென்ட்ரல் மார்க்கெட்டில் பொது நடைபாதையில் வியாபாரிகள் அல்லாதோருக்கு தற்காலிக கடைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. அப்படி கடைகள் ஒதுக்குவதை உடனடியாக ரத்து செய்ய வேண்டும்Õ என குறிப்பிட்டுள்ளது.

## மழை இல்லாததால் 12,000 ஏக்கரில் மானாவாரி பயிரிட்ட விவசாயிகள் கவலை

தொட்டியம், : மழை இல்லாததால் தொட்டியம் பகுதியில் 12 ஆயிரம் ஏக்க ரில் பயிரிடப்பட்ட விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

தொட்டியம் தாலுகா வில் தொட்டியம், ஏலூர் பட்டி, காட்டுப்புத்தூர் ஆகிய பிர்க்காக்களில் சுமார் 12 ஆயிரத்துக்கு மேற்பட்ட ஏக்கரில் கடலை, சோளம், தட்டப்பயிர், கம்பு உட்பட பல்வேறு பயிர்கள் வடகிழக்கு பருவ மழையை நம்பி பயிரிடுவது வழக்கம். இந்நிலையில் ஆடிப்பட்டம் தேடி விதை என்பது பழ மொழி. ஆனால் இந்தா ண்டு ஆடி மாதத்தில் ஒரு சொட்டுக்கூட மழை பெய்யாததால் ஆங்காங்கே உள்ள பகுதியில் உள்ள பொது மக்கள் அந்தந்த கோயில்களுக்கு பூஜை போட்டும் மழை வரவேண் டியும், சிறப்பு பூஜைகள் நடத்துகின்றனர்.

இந்நிலையில் ஆடி மாதம் முடிந்து ஆவணி முதல் மழை பெய்யாததால் ஆங்காங்கே உள்ள கோவில்களில் சிறப்பு பூஜைகள் நடத்தப்பட்டன. செப்டம் பர் 9ம் தேதி பட்டும் படா மலும் சிறிய மழை பெய்தது. ஆனால் இந்த மழை எந்த விதத்திலும் மானாவாரி பயிர்களுக்கு உதவாது. நாங் கள் இதை நம்பி கொண்டு தான் வாழ்ந்து கொண்டு இருக்கிறோம். ஆனால் கடந்த சுமார் 20 நாட்களாக மழைப் பெய்யாததால் களை வெட்டும் பணி பாதிக்கப்படுகின்றன. இதையும் மீறி கடலைப் பயிர்கள் விழுதும் இறங்கும் நேரம், பூ பூக்கும் நேரம் மழை பெய்யவில்லை. பல ஆயிரம் செலவில் இடுபொருட்கள் மற்றும் விதைகளுக்கு செலவு செய்துள் ளோம் அதை எடுப்பமா இல்லையா என்பது எங்களுக்கே கேள்விக் குறியாக உள்ளது. இதனால் தமிழக அரசு மானாவாரி சாகுபடி காடுகளுக்கு உரிய நிவா ரணம் வழங்க வேண்டுமென சுற்று வட்டார விவசாயி கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

## புரட்டாசியால் வெறிச்சோடின இறைச்சி கடைகள் மாநகரில் 22டன் காய்கறி விற்பனை

ஈரோடு, : புரட்டாசி மாதத்தையொட்டி இறைச்சி கடைகள் வெறிச்சோடியதால் காய்கறி விற்பனை அமோகமாக இருந்தது. ஈரோடு சம்பத் நகர் உழவர் சந்தையில் நேற்று ஒரே நாளில் 22 டன் காய்கறிகள் விற்றுத்தீர்ந்தன.

புரட்டாசி மாதத்தில் இந்துக்களில் பெரும்பாலானோர் அசைவ உணவை தவிர்த்து விடுவர். பெரும் பாலும் வாரம் ஒருமுறை ஞாயிற்றுகிழமைகளில் ஆடு, சிக்கன் இறைச்சி வகைகளை வாங்கி உண்ணுபவர்களும், மீன், முட்டை போன்றவற்றை உண்ணுபவர்கள் கூட புரட்டாசியில் அசைவத்தை தவிர்த்து விரதம் கடைபிடிப்பர். தற்போது புரட்டாசியையொட்டி இறைச்சி கடைக ளில் வெகு சிலரே இறைச்சி வாங்குகின்றனர். இதன் காரணாக இறைச்சி கடை களில் விற்பனை படு மந்தமக உள்ளது. கறிக்காழி விற்பனை டல்லாக உள்ள தால் பண்ணை கொள்முதல் விலை கூட ரூ.55 ஆக சரிவடைந்து விட்டது.

இதேபோல கடல்மீன்களின் விலையும் வழக்கத்தை விட சரிவடைந்து காணப்படுகிறது. தமிழகத்தில் பரவலாகவே மீன்களின் விற்பனை குறைந்துள்ளதால் கேரளா, கர்நாடகா போன்ற மாநிலங்களுக்கு மீன்கள் விற்பனைக்காக அனுப்புவது அதிகரித்துள்ளது. இறைச்சி விற்பனை சரிவடைந்துள்ள நிலையில் உழவர் சந்தைகளில் காய்கறி விற்பனை அமோக மாக உள்ளது.

ஈரோடு சம்பத்நகர் உழவர் சந்தைக்கு வழக்கமாக ஞாயிற்றுகிழமைகளில் 20 டன் காய்கறிகள் வரத்தாகி அவை விற்பனையாகி விடும். நேற்று புரட்டாசி ஞாயிறையொ ட்டி 22 டன் காய்கறிகள் வந்தது. இவை அனைத்தும் காலை 8 மணிக்கே விற்று தீர்ந்தது. உழவர் சந்தை நிர்வாகத்தினர் கூறுகையில், சுரைக்காய், புடலை, கத்திரி, வெண்டை, முருங்கை போன்ற காய்கறிகளின் வரத்து அதிகமாக இருந்த போதிலும் இவை உடனுக்குடன் விற்று தீர்ந்தது. அதேசமயம் வெங்காயம், தக்காளி வரத்து சற்று குறைந்துள்ளது. வழக்கமாக வெங்காயம் 1400 கிலோ, தக்காளி 1500 கிலோ வரையிலும் வரத்தாகும். ஆனால் தற்போது வெங்காயம் 1100 கிலோவும், தக்காளி 1200 கிலோ வீதம் மட்டுமே வரத்தாகிறது. இவற்றின் வரத்தும் அதிகமானால் மொத்த விற்பனையில் மேலும் சில டன் விற்பனை அதிகரித்திருக்கும். காய்கறிகள் விற்பனை அமோகமாக உள்ள

நிலையில் தேங்காய் வரத்தும் கணிசமாக குறைந்துள்ளது. இவ்வாறு உழவர் சந்தை நிர்வாகிகள் தெரிவித்தனர்.

## கம்பு சாகுபடியில் கலக்கல் லாபம் விவசாயிகளுக்கு ஆலோசனை

திருச்சுழி: இரவை பருவத்தில் கம்பு பயிரிடுவது குறித்து வேளாண் துறை சார்பில் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து வேளாண் துறை அதிகாரிகள் கூறியிருப்பதாவது:

இரவை பருவத்தில் கம்பு பயிரிடுவதற்கு கோ7, கோ(சியு) 9, ஐசிஎம்வி221, ராஜ்171, எக்ஸ்7 ஆகியவை ஏற்ற ரகங்கள் ஆகும். எக்டேருக்கு 3.75 கிலோ விதை இடவேண்டும். எக்டேருக்கு 7.5 சென்டில் நாற்றாங்கால் அமைக்க வேண்டும். 3*1.5மீ அளவு கொண்ட 6 படுக்கைகளை ஒரு சென்டில் அமைத்து, அரை மீட்டர் கால்வாய், அரை அடி ஆழத்தில் ஒவ்வொரு படுக்கையை சுற்றிலும் அமைக்க வேண்டும். எக்டேருக்கு 750 கிலோ தொழு உரம் இடவேண்டும்.

தேன் ஒழுகல் நோய் பாதித்த விதைகளை நீக்க 10 லிட்டர் நீரில் ஒரு கிலோ உப்பினை கரைத்து, விதைகளை அதில் கொட்டவேண்டும். மிதக்கும் விதைகளை நீக்கி, நல்ல தண்ணீர் கொண்டு 3 அல்லது 4 முறை கழுவி நிழலில் உலர்த்த வேண்டும். தண்டு ஈ மற்றும் தண்டு துளைப்பான் நோய் பாதிப்பை தடுக்க, வேளாண் அதிகாரிகளுடன் ஆலோசித்து விதை முலாம் பூச வேண்டும்.

அடிச்சாம்பால் நோய் தாக்குதலில் இருந்து தப்பிக்க, மெட்டலாக்சில் 6 கிராமுடன், 5 மில்லி தண் ணீர் சேர்த்து, ஒரு கிலோ விதையுடன் கலக்க வேண்டும். 600 கிராம் அசோஸ்பைரில்லம் மற்றும் பாஸ் போ பேக்டீரியாவுடன் ஒரு எக்டேருக்கு உண்டான விதையை கலந்து உயிர் உரமாக விதைக்க வேண்டும். விரல்களால் ஒரு செமீ ஆழத்திற்கு கோடுகள் இட்டு, ஒரு படுகைக்கு அரை கிலோ விதையினை தூவி மண்ணில் மூடவேண்டும். மீதைல் பாரதி யான் மருந்தினை விதைத்தவுடன் எறும்புகளில் இருந்து பாதுகாக்கலாம்.

நாற்றுகளை தண்டு ஈ தாக்குதலில் இருந்து காப்பதற்கு, கார்போபியூரான் 3ஜி 600 கிராம் அல்லது போரேட் 10ஜி180 கிராம் தூவி இட வேண்டும். 30 செமீ கால்வாய் மூலம் நீர்ப்பாசனம் செய்ய வேண்டும்.

மண்ணில் நீர் உறிஞ்சிம் வரை மட்டுமே நீர்ப்பாய்ச்ச வேண்டும். வேளாண் அலுவலர்களின் அறிவுரைப்படி, 45*15 செமீ இடைவெளியில், 3 முதல் 5 செமீ ஆழத்தில் பார்களின் பக்கவாட்டில் வேர்களை 40 லிட்டர் நீரில் ஆயிரம் கிராம் அசோஸ்பைரில்லம் கலந்த கலவையில் 30 நிமிடம் நனைத்து அதன்பின் நட வேண்டும். சாதாரண ரகங்களுக்கும், வீரிய ஒட்டுரகங்களுக்கும் ஏற்ப அளவுகளில் உரமிட வேண்டும்.

இதுதொடர்பான கூடுதல் விபரங்களுக்கு அந்தந்த பகுதி வேளாண் அலுவலரையோ, வட்டார வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்தையோ அணுகலாம் என வேளாண் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.